**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 94/2019 |
| Name | : Dhanushkodi |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணியூர் பாண்டியன் நகரில் வசித்து வருகிறேன். நான் மணவறை அலங்காரம் செய்து வருகிறேன். கடந்த 21.05.2019 ம் தேதி மாலை 06.30 மணியளவில் கணியூர் புதுார்மடம் அருகில் உள்ள பாரதி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் கேட்டின் முன்பு அந்த சாலையில் பாட்டு பாடி வசூல் செய்யும் கருப்பையா என்பவர் கடைக்கு செல்வதற்காக மேற்கிலிருந்து கிழக்கு பார்த்து சாலையை கடக்கும் போது காரத்தொழுவில் இருந்து வந்த டிஸ்கவர் இருசக்கர வாகனம் வாகன எண் ஞாபகம் இல்லை வாகனம் மோதி கருப்பயையாக கீழே விழுந்தார். நாங்கள் ஓடிச் சென்று துாக்கினோம் அவருக்கு பின் தலையில் அடிபட்டிருந்தது. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) வேலைக்கு செல்வதற்கு நான் வழக்கமாக கணியூர் பேருந்து நிலையம்

செல்வேனா என்றால் இல்லை. எனது வீட்டில் இருந்து புதூர் மடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் சுமார் 5 மணிக்கு வந்திருப்பேன். புதூர் மடத்தில் தான் இருந்தேன் என்றால் ஆமாம் கேட்டின் முன்பு நின்றிருந்தேன். புதூர் மடம் பேருந்து நிலையத்திற்கும் பாரதி பள்ளிக்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல 50 மீட்டர் தூரம் இருக்கும்.

(2) அ.சா.1 நாகேந்திரன் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் அதைப் பற்றி தெரியாது. இறந்து போன கருப்பையா எந்த வாகனத்தில் வந்தார் என்றால் அவர் நடந்து வந்தார். நாகேந்திரன் மற்றும் கருப்பையா பாட்டு பாடும் குழுவில் உள்ளார்கள் என்றால் கருப்பையா பற்றி தெரியும் நாகேந்திரனை தெரியாது. கருப்பையா பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான் அந்த இடத்தில் விசாரித்ததில் சொன்னார்கள். அவர்கள் குழுவாக 5–6 பேர் வந்தார்கள் என்ற விவரம் தெரியும். அவர்கள் வந்த வாகனம் எதுவும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல பள்ளிக்குள் இருந்தது. எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(3) நான் போலீஸ் விசாரணையில் பிரகாஷ்குமார் அவரது இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி பற்றி போலீஸ் விசாரணையில் நான் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து சரியாக எந்த பகுதியில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல சாலையின் மேற்கு பக்கம் நடந்தது. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கருப்பையா வந்தார் என்றால் சரிதான். எதிரி வடக்கிலிருந்து தெற்காக வந்தார். எதிரி சாலையின் கிழக்கு பக்கமாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எதிரி வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கமாகத்தான் வந்தார் என்றால் சரியல்ல எதிரி வடக்கிலிருந்து தெற்கு வந்து மேற்கு பக்கம் வந்துவிட்டார். எதிரி சரியான திசையில் வந்தார் என்றும் விபத்து சாலையின் மையப் பகுதியில் நடந்தது என்றால் சரியல்ல.

(4) கருப்பையாவிற்கு வயது முதிர்வு உண்டு பார்வை குறைபாடு பற்றி தெரியவில்லை. கருப்பையா வயது முதிர்வு மற்றும் பார்வை குறைபாடு காரணமாக

சாலையின் மையப் பகுதிக்கு எதிரியின் வாகனத்தை கவனிக்காமல் வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை 21ம் தேதி மாலை 07.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். என்னை போலீசார் 22ம் தேதி தான் விசாரித்தார்கள் என்றும், நான் சம்பவ இடத்தில் இல்லாமல் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு இறந்து போன கருப்பையாவின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhaylan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 94/2019 |
| Name | : | Sivakumar |
| P.W. | : | 5 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் கடத்துர் ரோட்டில் வசிக்கிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். 22.05.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு வண்டிக்கு சென்றேன். பாரதி பள்ளி முன்பு போலீசார் நின்று எழுதிக்கொண்டு இருந்தார்கள். அதைப் பற்றி விசாரணை நடத்தினார்கள் சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **22.05.2019 தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல போலீசார் என்னிடம் விவரம் சொன்னார்கள். இதற்கு முன்பு 2-3 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஒரு வழக்கில் சொல்லியுள்ளேன். நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhaylan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்